(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 5673** **Sub. Code : KTLM 12/ KTAM 12**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2016.

First Semester

Tamil/Tamil with Computer Applications

இலக்கணம் எழுத்து (தொல்காப்பியம் - நன்னூல்)

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொல்காப்பியரின் ஆசிரியர்

(அ) அகத்தியர் (ஆ) கல்லாடர்

(இ) தூமாக்கினியர் (ஈ) சிவஞான முனிவர்

2. மெய்யின் அளபே

(அ) காலென மொழிப

(ஆ) அரையென மொழிப

(இ) முக்காலென மொழிப

(ஈ) ஒன்றென மொழிப

3. ஃகான் றஃகான் எந்த உருபிற்கு வரும்

(அ) ஆறன் (ஆ) ஐந்தன்

(இ) நான்கன் (ஈ) மூன்றன்

4. ணளவென் புள்ளிமுன் —————— வெனத் தோன்றும்.

(அ) டண (ஆ) தந

(இ) றன (ஈ) ரழ

5. நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்

ஆவயின் ஒற்றாவது

(அ) டகரம் (ஆ) ணகரம்

(இ) றகரம் (ஈ) னகரம்

6. சாரென் கிளவி எவற்றொடு வலிக்கும்

(அ) பீரொடு (ஆ) காழ்வயின்

(இ) மகரத்தொடு (ஈ) னகரத்தொடு



Nesamony Memorial Christian College, Marthandam

7. நான்க னொற்றே ———————— ஆகும்.

(அ) எகாரம் (ஆ) மகாரம்

(இ) லகாரம் (ஈ) னகாரம்

8. மூன்றன் முதனிலை ———————— உரித்தே.

(அ) நீடலும் (ஆ) குறுகலும்

(இ) கெடுதலும் (ஈ) இயல்பாதலும்

9. நன்னூலார் குறிப்பிடும் சார்பெழுத்தின் விரி

(அ) 370 (ஆ) 369

(இ) 350 (ஈ) 320

10. தொல்காப்பியர் கூறி, நன்னூலார் நீக்கிய சாரியை

(அ) அன் (ஆ) இக்கு

(இ) அக்கு (ஈ) ஏன்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) மெய்களின் நிலையினை நூன்மரபு வழிநின்று எழுதுக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தை எடுத்துரைக்க.



12. (அ) 'ஆயி ரியல புணர்நிலைச் சுட்டே' — விளக்குக.

(அல்லது)

(ஆ) அளவு, நிறை, எண்ணுப்பெயர்களின் புணர்ச்சி விதிகளை எடுத்துரைக்க.

13. (அ) இகரவீற்றுச் சொற்புணர்ச்சிகளை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) யகரவீற்றுச் சொற்புணர்ச்சி குறித்து எழுதுக.

14. (அ) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுகளுடன் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) எண்ணுப்பெயர்களுடன் ஆயிரக்கிளவி வந்தால் ஏற்படும் மாற்றங்களைச் சுட்டுக.

15. (அ) மரப்பெயர்களை விளக்குவதில் இலக்கணிகள் எவ்வாறு வேறுபடுகின்றனர்?

(அல்லது)

(ஆ) நன்னூலார் குறிப்பிடும் விகாரப்புணர்ச்சி எடுத்துக்காட்டுக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தைச் சான்றுகளுடன் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மொழி மரபு உணர்த்தும் இலக்கண வரையறைகளைத் தொகுத்துரைக்க.

17. (அ) சாரியைகளும் அவற்றின் திரிபுகளும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி விதிகளைப் புலப்படுத்துக

18. (அ) உருபியல் கூறும் செய்திகளை விரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மகரவீற்றுச் சொற்புணர்ச்சிகளை விவரி.

19. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் பெறும் புணர்ச்சி விதிகளை நிறுவுக.

(அல்லது)

(ஆ) வருமொழி முதலில் நூறு வந்தால் பெறும் மாற்றங்களை எழுதுக.



20. (அ) சார்பெழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியர், நன்னூலார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர், நன்னூலார் குறிப்பிடும் எழுத்ததிகாரத்தின் சிறப்பியல்புகளைத் தொகுத்தெழுதுக.

---



Nesamony Memorial Christian College, Marthandam